# அங்கயற்கண்ணி அருள்வெள்ள மாலை

நா. கனகராச ஐயர்

பதிப்பாளர்

**பா.சவிதா**

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்லைக்கழகம்
சென்னை - 600 005.
2007

# அங்கயற்கண்ணி அருள்வெள்ள மாலை

## நா. கனகராச ஐயர்


பதிப்பு
பா. சவிதா
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

நெறியாளர்
ய. மணிகண்டன்
விரிவுரையாளர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்



சென்னைப் பல்கலைக்கழகம்
தமிழ் இலக்கியத்துறை
சென்னை–5

2007

**ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை 600 005.

# மேற்பார்வையாளர் சான்றிதழ்

நா. கனகராச ஐயரால் இயற்றப்பட்ட 'அங்கயற்கண்ணி அருள்வெள்ள மாலை' என்னும் இந்நூலை மேற்படி தாள் சுவடியிலிருந்து பெயர்த்து எழுதி பா. சவிதா செய்துள்ள இப்பதிப்பு சென்னைப் பல்கலைக்கழகம் சுவடியியல் பட்டயப்பேற்றிற்காகப் பதிப்பிக்கப்பட்டது என்றும் இப்பதிப்பின் மீது வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்படவில்லை என்றும் சான்று அளிக்கிறேன்.

மேற்பார்வையாளர்

(ய. மணிகண்டன்)

இடம் : சென்னை
நாள் :

பா. சவிதா
ஆய்வாளர்,
சுவடியியல் மற்றும் பதிப்பியல்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை 600 005.

## பதிப்பாளர் உறுதிமொழி

நா. கனகராச ஐயரால் இயற்றப்பட்ட 'அங்கயற்கண்ணி அருள்வெள்ள மாலை' என்னும் இந்நூல் சுவடியியல் பட்டயப்பேற்றிற்காக எனது சொந்த முயற்சியால் தாள்சுவடியிலிருந்து பதிப்பித்து உருவாக்கப்பட்டதாகும். இதற்கு முன் வேறு எந்த ஆய்வுப் பட்டத்திற்கும் இப்பதிப்பு நூல் அளிக்கப்படவில்லை என உறுதிகூறுகிறேன்.

பதிப்பு மாணவர்

(பா. சவிதா)

இடம் : சென்னை.
நாள்:

## நன்றியுரை

சுவடியியல் பட்டய வகுப்பில் சேர்ந்து பயில வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும் தமிழ் இலக்கியத்துறைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**'அங்கயற்கண்ணி அருள்வெள்ளமாலை'** என்னும் தலைப்பில் இப்பதிப்பு நூல் உருவாக நெறியாளராக இருந்து நெறிப்படுத்தியதோடு யாப்பினைத் தெளிவுற விளக்கிய **முனைவர் ய. மணிகண்டன்** அவர்களுக்கும், இவ்வகுப்பில் பயில வாய்ப்பளித்து உதவிய சென்னைப் பல்கலைக்கழக இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் **வீ. அரசு** அவர்களுக்கும், தமிழ் மொழித்துறை விரிவுரையாளர் **முனைவர் அ. பாலு** அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடப்பாடுடையேன்.

இச்சுவடியைப் பதிப்பிப்பதற்காகச் சுவடி அளித்து உதவிய சென்னைக் கீழ்த்திசை நூலகத்தார்க்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இச்சுவடியில் ஏற்படும் ஐயங்களை விளக்கியதோடு அச்சடித்துக் கொடுத்தும் உதவிய **ந. ஆனந்தி** அவர்களுக்கும், சிறந்த முறையில் இந்த ஆய்வேட்டை வடிவமைத்துக் கொடுத்த **இல. கணேசன்** அவர்களுக்கும் என் நன்றி உரியது.

பலவகையிலும் ஊக்கப்படுத்தி கல்வியயில வழிகாட்டிவரும் எனது **தந்தை கோ. பாலகிருக்ஷ்ணன், தாய் பா. செல்வி, சகோதரர் பா.சசிதரன்** அவர்களுக்கும் எனது நன்றி என்றும் உரியது. நூல் அமைவதற்குப் பலவகையிலும் உதவிபுரிந்த **வை. சிவநேசன், அ. செந்தில்நாராயணன், க.கலைவாணி** ஆகியோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | நூலாசிரியர் வரலாறு | 3 |
| 3. | நூல் அறிமுகம் | 6 |
| 4. | அங்கயற்கண்ணி அருள்வெள்ள மாலை | 15 |
| 5. | பின்னிணைப்புகள் | |
| | சொல்லடைவு | 67 |
| | அருஞ்சொற்பொருள் | 85 |
| | செய்யுள் முதற்குறிப்பு அகராதி | 89 |
| | ஒப்புமைப்பகுதிகள் | 94 |
| | துணைநூற்பட்டியல் | 95 |

# முன்னுரை

விற்பனைக்காக ஒருமுறை குறிப்பிட்ட எண்ணிக்கையில் அச்சிடப்படுவது ஒரு பதிப்பு என அகராதிகள் பொருள் தருகின்றன(க்ரியா, 2001, ப.675). ஆனால் சுவடியியல் கல்வியில் சுவடிப்பதிப்பு என்பது ஓலைச் சுவடிகள் மற்றும் தாள் சுவடிகளிலுள்ள செய்திகளை இன்றைய அச்சு வடிவில் வெளிப்படுத்துவதைக் குறிப்பதாகும். இவ்வகையில் அங்கயற்கண்ணி அருள்வெள்ள மாலை என்னும் தாள் சுவடியிலுள்ள செய்திகள் சென்னைப் பல்கலைக்கழகம் சுவடியியல் பட்டயப்பேற்றிற்காகப்(2006-2007) பதிப்பிக்கப்படுகிறது.

கனகராஜ ஐயர் இயற்றிய இந்நூலின் தாள்சுவடி சென்னைப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நிலைய நூலகத்தின் மூலம் பெறப்பட்டது. இவர் 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் கவிஞர்களுள் ஒருவர். அன்னை மீனாட்சியை வழிபாட்டுக் கடவுளாகக் கொண்டு இந்நூலின் காப்புப் பாடலை இயற்றியுள்ளார்.

மதுரையம்பதியில் கோயில் கொண்டு அருள்புரியும் அரசி அங்கயற்கண்ணி பெருமையைக் கூறும் வகையில் இந்நூல் திகழ்கிறது. காப்பு, வாழ்த்துப்பாடல் நீங்கலாக நூறு கட்டளைக் கலித்துறையால் அமைந்த மாலை இலக்கிய வகையைச் சேர்ந்தது இந்நூல்.

இந்நூலின் முதலில் நூல் அமைப்பு, நூலாசிரியரின் வரலாறும் படைப்புகளும், நூலின் கருத்துகள் இவற்றைப் பற்றிச் சுருக்கமாகவும் அதனை அடுத்து கனகராஜ ஐயரின் செய்யுட்களும் அமைந்துள்ளன. மேலும், துணைநூற் பட்டியல், செய்யுள் முதற்குறிப்பு அகராதி, அருஞ்சொற்பொருள் அளிக்கப்பட்டுள்ளன. இறுதியாக இந்நூலில் இடம்பெறும் பெயர்ச் சொற்களின் சொல்லடைவும் பிற நூல்களுடனான ஒப்புமைப் பகுதி, மாலை இலக்கிய வகையுடனும் இந்நூல் முடிவடைகிறது. மாலை இலக்கிய வகையுள் இரட்டைமணி மாலை, நான்மணி மாலை இவற்றின் பட்டியல் மட்டும் இங்கு அளிக்கப்பட்டுள்ளது.

'அங்கயற்கண்ணி அருள்வெள்ள மாலை' என்னும் இந்நூலின் மூலம் மதுரையில் வாழும் அன்னை மீனாட்சியின் பெருமையையும் புலவர் கனகராஜ ஐயரின் சமயப்பாங்கினையும் அறிந்துகொள்ளலாம்.

# நூலாசிரியர் வரலாறு

20ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வரலாற்றில் போற்றத்தக்கவர் நா. கனகராச ஐயர் ஆவார். இவர் புதுக்கோட்டை அரசு கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளைக்கு நிகராகச் சிற்றிலக்கியங்களைப் படைத்தவர். ஆதலின் இவர் இருபதாம் நூற்றாண்டு மீனாட்சி சுந்தரம்பிள்ளை எனச் சான்றோர்களால் போற்றப்படும் பெருமைக்குரியவராக விளங்கியவர்.

கவி புனையும் இவரது ஆற்றலைக் கண்டு கவிராச பண்டிதர் என இவரை அழைத்தனர். இலக்கண இலக்கியப் புலமையோடு வரலாற்று அறிவும் வாய்க்கப்பட்டவர். தமிழ்ப் புலவர் வரலாறு, சோழமன்னர் வரலாறு என்னும் வரலாற்று நூல்களை எழுதியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டில் எண்ணற்ற சிற்றிலக்கிய வகையில் கணக்கற்ற சிற்றிலக்கிய நூல்களைப் படைத்து இருபதாம் நூற்றாண்டின் சிற்றிலக்கியச் செழுமைக்கு விடிவெள்ளிப் புலவராக விளங்கியவர். குறவஞ்சி, கலம்பகம், மாலை, அந்தாதி, ஊசல், திருச்சாழல், விண்ணப்பம் , தூது, தாண்டகம், சதகம், கும்மி, தாலாட்டு, கிளிக்கண்ணி, ஆனந்தக் களிப்பு, பிள்ளைத் தமிழ், திருப்புகழ், ஒருபா ஒருபஃது, இருபா இருபஃது, கோவை முதலான வகைகளில் புவனேசுவரி மீதும் திருப்பெருந்துறை மீதும் சிற்றிலக்கியங்கள் எழுதியுள்ளார்.

## படைப்புகள்

| | | |
|---|---|---|
| குறவஞ்சி | - | திருப்பரங்குன்றக் குறவஞ்சி |
| பிள்ளைத் தமிழ் | - | கம்ப நாடார் பிள்ளைத் தமிழ், பெரிய நாயகி பிள்ளைத் தமிழ், திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ், திருவாரூர் பிள்ளைத் தமிழ். சடகோபர் பிள்ளைத் தமிழ் |
| கலம்பகம் | - | திருப்பரங்குன்றக் கலம்பகம் |
| ஊசல் | - | சுந்தரேசர் ஊசல், மீனாட்சி சுந்தரேசர் ஊசல் |
| அந்தாதி | - | சொக்கலிங்க வெண்பா அந்தாதி, மதுரைக் கயற்கண்ணி பதிற்றுப்பத்தந்தாதி |
| தூது | - | சொக்கன் நெஞ்சுவிடு தூது |
| விண்ணப்பம் | - | பிடித்த விண்ணப்பம் |
| தாண்டகம் | - | திருநெடுந்தாண்டகம் |
| மான்மியம் | - | சதாசிவ மான்மியம் |
| திருச்சாழல் | - | திரு ஆலவாய்த் திருச்சாழல் |
| கும்மி | - | புவனேசுவரி கும்மி |
| தாலாட்டு | - | புவனேசுவரி தாலாட்டு |
| கோவை | - | திருப்பெருந்துறை அமுதக் கோவை, ஐந்தெழுத்து அமுதக் கோவை |
| ஆயிரம் | - | திருப்பெருந்துறை மாணிக்க ஊசல் திருவாயிரம் |
| மாலை | - | கற்பகவல்லி மாலை, |

கயற்கண்ணி மாலை,
கனகவல்லி மாலை,
யோகநாயகி மாலை,
புவனேஸ்வரி மாலை,
சொக்கலிங்க மாலை,
திருப்பரங்குன்ற மாலை.

திருப்புகழ் - புவனேசுவரி திருப்புகழ்
நூற்றெட்டு - பேரின்ப நூற்றெட்டு.

## பக்திச் சிறப்பு

தமிழ் நாட்டின் சைவத் தலங்கள் தோறும் சென்று சிற்றிலக்கிய வகையில் சிறந்த வகையான மாலை இலக்கிய வகையில் மிகுதியான நூல்களைப் படைத்துள்ளார். குறிப்பாகத் திருப்பரங்குன்றம், திருவாலவாய், மூதுரை, திருப்பெருந்துறை, கன்னியாகுமாரி, திருவண்ணாமலை முதலான திருத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் ஈசுவரன், ஈசுவரி மீது மாலை, உலா, கலம்பகம், பிள்ளைத் தமிழ், அந்தாதி, திருப்பள்ளி எழுச்சி, ஆனந்தக் களிப்பு, அமுதக் கோவை, திருவாயிரம், ஆற்றுப்படை, அநுபூதி, அலங்காரம், சதகம், கும்மி, தாலாட்டு, கோவை, அம்மானை, திருப்புகழ் முதலான சிற்றிலக்கிய நூல்கள் பல காணப்படுகின்றன. இவ்வகையிலான நூல்களை இவர் சைவ சமய பக்தி ஈடுபாட்டுடன் பாடியுள்ளார்.

## நூல் அறிமுகம்

மாலை என்பது தமிழிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இறைவனைப் பா மாலையால் வழிபடுதல் தொன்றுதொட்டுப் பயின்று வரும் வழக்கம். மாலை என்னும் நூல் ஒரு பொருளைக் குறித்துப் பல செய்யுள்கள் கூறுவதாகும்.

பொதுவாக மாலை என்று வழங்கப்படும் பிரபந்தத்தின் பொருளை ஆராயும்போது பூக்களால் தொடுக்கப்பெறும் மாலையை நாம் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். ஒரே விதமான பூக்களைக் கொண்டும் பல்வேறு பூக்களுடன் தழைகளைக் கொண்டும் மாலை தொடுக்கலாம். அதே போன்று ஒரே பொருளை முன்னிட்டு அப்பொருளைப் பற்றிய பல்வேறு அம்சங்களைக் குறித்து ஒரே வகைப்பாவைக் கொண்டும் இந்நூலைப் பாடலாம். பல்வேறு பாக்களைக் கொண்டும் பாவினங்களைக் கொண்டும் பாடலாம். மாலை வகைச் சிறு நூல்கள் சொல்லழகும் பொருளழகும் மிக்கு விளங்கும் என்று கலைக்களஞ்சியம் மாலை இலக்கியத்திற்குப் பொருள் தருகிறது.

மாலை இலக்கியம் பல வகைப்படும். அவை பன்மணி மாலை, இரட்டைமணி மாலை, மும்மணி மாலை நான்மணி மாலை, வருக்க மாலை, மெய்க்கீர்த்தி மாலை காப்பு மாலை, வேனில் மாலை, பல்சந்த மாலை, அங்க

மாலை, வசந்த மாலை, நவமணி மாலை, அனுராக மாலை முதலியனவாகும்.

இவற்றுள் 'அங்கயற்கண்ணி அருள்வெள்ள மாலை' என்னும் இந்நூல் மதுரையில் ஆட்சிபுரியும் அங்கயற்கண்ணியின் அருட்செயல்களையும் புகழ்ப் பெருமைகளையும் எடுத்துக்கூறும் துதி இலக்கியமாக அமைந்துள்ளது. நூலின் காப்புப் பாடல் வெண்பாவால் அமைந்தாலும் மாலைகள் நூறும் கட்டளைக் கலித்துறைகளால் அமைந்துள்ளன. கட்டளைக் கலித்துறை குறித்த செய்திளைக் காண்போம்.

## யாப்பு

காலந்தோறும் மரபின் அடிப்படையில் தோன்றிச் செழித்துத் துலங்கும் யாப்பு வடிவங்கள் தமிழில் பலவாகும். தமிழ்ப் பா வடிவங்களுள் எழுத்தெண்ணிக்கை வரையறை பெற்ற ஓசைச்சிறப்பு மிக்க வடிவங்கள் சில மலர்ந்தன. அவை 'கட்டளை' என்னும் அடைமொழியையும் பா வடிவப் பெயர்களில் ஏற்றன. தமிழ் யாப்பில் பா வடிவங்களை எழுத்தெண்ணிக்கை வரையறையோடு அணுகும் போக்கு தொல்காப்பியத்திலேயே உண்டு.

காரிகையுரையில் இடம்பெறும் மேற்கோள் நூற்பா முதன்முதலில் கட்டளைக் கலித்துறை வடிவத்தின் இலக்கணத்தை எடுத்துரைக்கிறது.

"அடியடி தோறும் ஐஞ்சீ ராகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடைஒரு சீரும் விளங்காய் ஆகி
நேர்பதி னாறே நிரைபதி னேழென்று
ஓதினர் கலித்துறை ஓரடிக் கெழுத்தே"
(யாப்பருங்கலக் காரிகை).

கட்டளைக் கலித்துறைக்கு இலக்கண நூல்கள் மொழிந்துள்ள இலக்கணத்தைப் பொற்கோ அவர்கள் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

"ஐஞ்சீரடி நான்காய் அமைவது கலித்துறை. ஐந்து சீர்களைக் கொண்ட அடிகள் நான்கினால் அமைவது கலித்துறை என்றது பொது இலக்கணம். இந்தக் கலித்துறையில் சற்று இறுக்கமான இலக்கண அமைப்பு அமையும்போது அது கட்டளைக் கலித்துறையாகிறது. கட்டளைக் கலித்துறை வெண்டளைபெற்று வேற்றுத்தளை விரவாமல் வெள்ளோசை உடையதாய் அமையும். ஒவ்வொரு அடியிலும் உள்ள இறுதிச்சீர் விளங்காய்ச் சீராக இருக்கும். நேரசையால் தொடங்குகிற அடியில் 16 எழுத்துகளும் நிரையசையால் தொடங்குகிற அடியில் 17 எழுத்துகளும் அமைந்திருக்கும்.

இத்தகைய சிறப்புமிக்க கட்டளைக் கலித்துறை யாப்பில் 'அங்கயற்கண்ணி அருள்வெள்ள மாலை'யாகிய இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

## நூலின் கருத்து

கனகராஜ ஐயரின் சமயக் கருத்துகளும் அங்கயற்கண்ணியின் பெருமைகளும் இந்நூறு பாடல்களில் நிறைந்துள்ளன. இந்நூலில் மீனாட்சியம்மையின் பெருமைகளைப் பலவாறு பாடியிருக்கிறார். அவ்வகையில் பாடும்போது சிவபெருமானின் சிறப்புகளைக் கூறி இத்தகைய சிறப்புமிக்க பிரானின் துணையாக விளங்குபவளே எனப் போற்றுகிறார். சிவபெருமானின் பெருமைகளைக் கூறுமிடத்து அவரின் திருவிளையாடல் நிகழ்ச்சிகளை ஆங்காங்கு எடுத்துக்காட்டிச் சென்றுள்ளார். சான்றாகப் பல இடங்களைக் காட்டலாம்.

பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பெற்ற வரலாற்றைக் கூறுவதாக,

"பிட்டுக்கு மண்சுமந் தாற்றிடை
வெள்ளம் பிறழ்வதையும்" (93)

என்னும் அடி அமைந்துள்ளது. இவ்வாறே குண்டோதரனுக்குச் சோறு அளித்ததைக் கூறுவதாக,

"குண்டோ தரனெனும் பூத
கணத்தான் கொடும்பசிக்கே
கண்டோர் வியப்புற அன்னக்
குழிகாட்டு கையுடையாள்" (94)

என்னும் அடி அமைந்துள்ளது.
இவ்வகையில் பின்வரும் பல அடிகளைச் சான்று காட்டலாம்.

"முடிமேவு பாண்டியர் நற்குலம்
வாழ முளைத்தெழுந்த
கொடியே தடாதகை யாகி
விளங்கிய கோமளையே" (45)

"சுந்தரப் பாண்டியன் மாலை
யுவந்த சுருதிவல்லி" (51)

"மறவர் பணிபுரி பாண்டிய
நாட்டு மதுரையுளானாய்" (60)

"அங்குச பாசம் பிடித்த
மகனோ டாறுமுகனைச்
செங்கனி மாம்பழம் காரணமாகச்
செருவி ழைத்த
சங்கரன் மாளிகை சூடிய
பெண்மயில் சாந்தமுளாய்" (61)

"துணிவு மிகுந்த வவுணரும்
ஆகவம் சோர்வுறவே
தணிவில் படையேந்து மெல்லிய
லார்படை தாங்கிறைவீ" (66)

"பார்க்கோ புனற்கோ கனற்கோ
வளிக்கோ பரவுவிண்ணின்
ஊர்க்கோ அரசியல் நாட்ட
நெருப்புள் உடலெடுத்தாய்" (67)

"பெரியகிழியைத் தருமிக் களித்த
பிரான் துணையே"(91)

அன்னை மீனாட்சி கோயில் கொண்டுள்ள தலங்களைப் பற்றியும் இந்நூலின் இடையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

"மாங்காடு சூழ்ந்த மதுராபுரி
மக்கள் வாழ்வருள்வாய்"(44)

இம்மாய வாழ்வே இன்பம் மிகுந்தது என்று கருதுபவர்களுக்கு இந்நூலில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளன.

"இம்மாய வாழ்விடை யின்பமுண்
டென்ன இருப்பவர்க்கு
வெம்மாய வல்வினை செய்யும்
கொடுமை விலக்குதியால்
தம்மாய வாழ்வை மறந்துநின்
பாதங்கள் சார்ந்தவரை
அம்மா மறத்திகொல் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே (58)

தமிழ்நாட்டின் வளத்தை விளக்கும் வகையில்,

"நெல்லாடு நீள்வயல் சூழ்தமிழ்
நாட்டின் நிறைசெல்வியே"(73)

"ஏம்பல் மிகுந்த குடிகள்
மலிந்த இருந்தமிழ்நாடு"(75)

"சூற்கோள் மலிந்த முகில்சூழ்
தமிழகஞ் சூழ்கொடியே"(80)

"காற்றுங் கமழும் தமிழ்ப்பாண்டி
நாட்டினைக் கரத்தருள்(84)

போன்ற அடிகள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்ப் புலவர்கள் மீது கொண்டுள்ள பற்றினைக் கீழ்க்கண்டவாறு பாடியுள்ளார்.

"என்பை யுருக்கும் தமிழ்ப்பாடல்
பாடும் இயற்புலவர்
இன்பை யடைதற் கியைவன
வாற்றும் எழிற்கொடியே" (4)

"விரவணி யாப்பின் நினைப்புகழ்
பாவலர் மேதகவும்"(23)

"எப்பா வலரும் இறைஞ்சிப்
பராவும் இறைமையினாய்"(70)

"சொல்லாடு பாவலர் நாமேல்
நடந்த சுடர்க்கொடியே"(73)

"நடையார் புலவர் மனத்திடை
யேறி நடித்தருள்வாய்"(82)

"முன்னாள் நினைப்போற்று பாவாணர்
வாக்கில் முழல்சினையே"(97)

சொற்பொழிவு ஆற்றும் திறன் வேண்டும் என்பதை இறைவியிடம் பின்வருமாறு விண்ணப்பித்துக் கொள்கிறார்.

"சொல்லாட வல்ல துணிவெனக்
கிலது சுருதிமுடி
நல்லாடல் பூணும் நளினப்
பதத்துணை ஞானவல்லி"(15)

ஐம்புலனை அடக்கி நற்பொருளை போதிக்குமாறு இறைவியிடம் வேண்டுவதைப் பின்வரும் அடிகளில் காணலாம்.

"நெறியே முடியே தெளியாத
மாந்தர் நிலைதெறிந்து
பொறியே புலனே யடக்கிப்
பொருளினைப் போதிப்பையே"(71)

இவை தவிர இந்நூலின் பாடல்கள் சில நூல்களுடன் ஒப்ப வைத்து எண்ணத்தக்கனவாய் அமைந்துள்ளதையும் காணமுடிகிறது. இவை இந்நூலின் பின்னிணைப்புப் பகுதியாகக் கொடுக்கப்பட்டுள்ளது(ஒப்புமைப் பகுதி).

இந்நூலின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அங்கயற்கண்ணி அருள்வெள்ளமேஎன்று கூறப்படுவதால் மாலை இலக்கியங்கள் பொதுவாக ஒரே மகுடம் பெற்று விளங்குவதை அறியலாம். மேலும் இந்நூலின் வழியாக மதுரையில் ஆட்சி புரியும் அங்கயற்கண்ணியாகிய இறைவியே அனைத்து நிலையையும் கடந்து நிற்பதை உணரலாம்.

# அங்கயற்கண்ணி அருள்வெள்ள மாலை

## காப்பு

தமிழ்மதுரை வாழவந்த தண்டமிழ்ச் செல்வி
அமிழ்துபொழி யம்பகங்கொ ளன்னை -
இகழ்மறைதேர்
அங்கயற்க ணம்மை அருள்வெள்ள மாலைமகன்
பங்கயக்கண் எய்தும் பணிந்து.

## நூல்

1. நூலவா நுண்மை யனைத்து
மருள்புரி நோன்புடையாய்
ஞாலவாழ் வின்ப நயக்க
வமைத்தருள் நல்விழியாய்
பாலவா மின்பத் தமிழ்மாது
யேற்றுப் பரிந்தருள்வாய்
ஆலவாய் கோலோச்சும் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

2. செறிவு தெளிவு சமநிலை
சாரச் சிறந்தகவி
நெறிதெளி பாவலர் பாடிளர்
சூட்ட நிரம்பும்விழி
வெறிகமழ் நோக்கத்தின் ஆண்ட
ருள்வாயென்பர் மேதகையோர்
அறிபொரு ளாகாத அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

3. தாண்டவ மாடிய தேவனைக்
கால்மாற்று தண்டமிழன்
பூண்ட விரதம் நிறைவேற்றி
யாண்ட பொலங்கொடியே
நாண்டரு நோக்கோடு நம்பனை
யெய்தியநங்கை நின்னை
ஆண்டவ னென்குலம் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

4. என்பை யுருக்கும் தமிழ்ப்பாடல்
பாடும் இயற்புலவர்
இன்பை யடைதற் கியைவன
வாற்றும் எழிற்கொடியே
துன்பை யடியார் அறியாது
காத்த சுடர்விழியாய்
அன்பை யுவந்தருள்அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

5. நாற்றம் வளரு மலர்சூடு
கூந்தலெம் நாயகியே
தேற்றம் இஃதென வன்பருக்
கோதும் தெளிவுருவே
மாற்ற மனமிறந் தோங்கு
நிலத்து வளரொளியே
ஆற்ற லருளதி அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

6. சொல்லா விரதியர் நெஞ்சகக்
கோயில் குலாமயிலே
எல்லா மறிந்தவன் தோள்மாது
யேந்தும் எழிலுருவே
வல்லா ரெனச்சிறு மக்களை
மாற்றும் வலியுருவே
அல்லார் குழலருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

7. பூரண மொன்றென வேத
சிரங்கண்ட பூரணியே
காரண மீதென காரியம்
காட்டிக் கனிந்தருள்வாய்
நாரண ணான்முகன் ஏத்திய
பாத நளிவுவல்லி
ஆரணம் நாட்டிய அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

8. பொற்குட நீர்கொண்டு திக்கய
மாட்டப் பொலிதிருவே
சற்குண மிக்கவர் போற்றும்
பதமலர் தந்தருள்வாய்
கற்குண மேகொளா நெஞ்சகம்
கொண்ட கசட்டடியேன்
அற்குண மோர்ந்தருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

9. சீதர னாரணன் தேவர்
சகாயன் திகிரியினான்
சோதரி யென்று சொலவந்த
செல்வச் சுடர்கொடியே
காதர நீங்கிய வாழ்வினி
லெந்தமைக் காத்தருள்வாய்
ஆதர மெய்யுரு அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

10. கோத்த முவந்தனை ஆரிய
நற்றமிழ்ச் சொற்களினால்
ஏத்த நினைந்தவர் நெஞ்சகத்
தேறும் எழிலுருவே
காத்தல் கடலென யாமோ
நினக்குரை காட்டுவதே
ஆத்தன் இடமுன்ற அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

11. தருங்குணம் பூண்ட வணியென்ப
துன்விழி சாற்றுவதே
வருங்குண முள்ளவர் யாமென்றல்
நின்றன் மனமறியும்
பெருங்குணம் யாவும் திரண்டு
ருவாகிய பெண்மயிலே
அருங்குணம் வாழ்வுநும் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

12. செந்தே னிகர்க்கும் சுருதி
மழலைச் சிறுமகவை
வந்தே யணைக்கும் இருகயல்
காட்டும் வராங்கனையே
நொந்தே வருந்தியடை வேமைக்
காத்தருள் நோன்புடையாய்
அந்தேரில் வந்தருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

13. வெறிமேவு பூந்தொடை சூடி
விளங்கிய மெல்லியலே
நெறிமேவு மன்பதைக் காத்தருள்
மீன்விழி நின்மலையே
முறிமேவு மெய்ப்பொருள் தன்னைத்
தழுவிய கோமளையே
அறியேமை ஆண்டருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

14. நெடியானை மூத்தவ னென்று
கொளுமன நின்மலையே
தொடியாலும் பொன்னணி யாலும்
விளங்கிய தோற்றத்தினாய்
மிடியானும் நோய்பிணி யானும்
வருந்தும் விழல்னெனை
அடியானெனக் கொள்க அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

15. சொல்லாட வல்ல துணிவெனக்
கிலது சுருதி முடி
நல்லாடல் பூணும் நளினப்
பதத்துணை ஞானவல்லி
எல்லாடு நின்முக மண்டலத்
துள்ள இருவிழிகள்
அல்லாடு மேற்காக்க அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

16. நீரோக் கியகடல் நாட்டுட்
புகாத நிலைக்கடங்க
ஏரோக் கியதிருப் பாதத்தைத்
தூக்கிய ஏந்தலினைச்
சீரோக் கியதிருச் செல்வனெனப்
பெற்ற தேவியெனக்கு
ஆரோக் கியமருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

17. செம்மேனி மைந்தர் இருவரை
யீன்ற திருவுடையாய்
செம்மேனி வள்ளல் ஒருவனைச்
சேரும் செயலுடையாய்
எம்மேனி பொன்மேனி யாகி
நினக்கே இசைந்தபணிக்கு
அம்மே பொருந்துக அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

18. என்னால் நினதுரு வெண்ணி
யுளத்தகம் ஏற்றிவைத்தல்
மன்னா வுலகில் எளிதன்
றெனினும் வழுத்துகின்றேன்
பொன்னாடர் தேறப் பரம்பொருள்
காட்டிய பூரணியே
அன்னாய் அருள்செய்க அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

19. தாயே யெனச்சொலிப் போற்றி
யணுகும் தனயர்தளம்
நீயே யருளால் அடிப்பணிக்
காக்கும் நிலையிலதேல்
வாயே மனமே யருளி
யெமக்கென் வரும்பயனே
ஆயே அருள்நல்க அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

20. களவைப் பெருக்சிக் கசட்டைத்
திரட்டிக் கலங்குகின்றேன்
உளவைத் தெரிந்து புகுங்கள்ளர்
அந்தோ உயிர்குடிப்பர்
தளவைப் பொருநகை வெண்மதி
மாமுகம் தாங்கிநல்காய்
அளவைக் கடந்தெழும் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

21. பெருமைக் குரிய அழகப்
பிரான்தழும் பெண்மயிலே
கருமைத் திருமேனி மாயவன்
தங்காய் கருணைவல்லி
தருமைப் பராபரை நீயென்று
தேர்ந்து சரண்புகுந்தேன்
அருமைக்கு வீறிய அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

22. பானினைந் தெய்தும் குழவியைத்
தாயினும் பார்த்தருளும்
தானினை கூறுதற் கில்லா
வுயிர்க்குலத் தாயெனநின்
பானினைந் தெய்தும் சிறியேன்
துயரம் பரிகரிப்பாய்
ஆனினைந் தேற்றருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

23. குரவணி பூங்குழற் கோமள
வல்லி குணக்கடலே
விரவணி யாப்பின் நினைப்புகழ்
பாவலர் மேதகவும்
கரவணி நெஞ்சினர் கீழ்மையும்
கண்டேம் கருத்துறைவாய்
அரவணி மெல்லியல் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

24. வையையை நின்றிரு நாட்டுக்
கணியென வைத்துவந்தாய்
செய்யை வளர்க்கும் திருப்பணி
பூண்ட திருவிழியாய்
கையை மணத்தை யுணர்வினை
நாவையுள் காலிலிட்டோம்
ஐயை பணிபூணும் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

25. ஆரிடம் பாடும் முனிவார்
கோட்டி அறிந்திலனே
பாரிடம் சூழும் பரமேசன்
வாமம் பகிர்ந்துகொண்டாய்
நீரிடம் மீனாய் விளையாடி
யாண்டருள் நீள்விழியாய்
ஆரிடம் சாருவம் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

26. கரும்பினு மின்மொழிக் காரிகை
யென்றுனைக் கண்ணுதலோன்
விரும்பின ளேற்ற திருமணக்
காட்சியை விண்ணவர்க்கும்
அரும்பெற லாக்கி யடியே
முக்காக்கிய ஆண்டவளே
அரும்பிய மூரலை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

27. கடும்படை வேண்டிய காளியும்
துர்க்கையும் கைம்பணிசெய்
அரும்படை வேண்டாக் கருணை
விழிப்படை அம்பிகையே
கொடும்படை தாங்கிய திக்கலர்
தோற்கக் கொடுஞ்சமர்செய்
அரும்படை யேந்தினை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

28. கருங்குயில் பாடும் களிலிசை
கேட்டருள் காதினியாய்
பெருங்குல மாதர் இசைப்பாட்
டுவந்தருள் பெண்மயிலே
வருங்குடி யாவும் வளர்குடி
யாக்கிய வண்மையைநீ
அருங்குடி கண்டனை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

29. பொருளுரை பேசிய மாமுனி
வோர்புகழ் பொற்கொடியே
தெருளுரை யாம்பெறத் தென்றிசை
நோக்கும் திருமுகத்தாய்
மருளுரை பேசி மயங்காத
வாழ்வை வகுத்தருளாய்
அருளுரை யாகநீ அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

30. அடிப்ப தணைப்பது தாய்கர
மென்பர் அருளறிவர்
பிடிப்ப தெடுப்பது தாய்கர
மென்பர் பெருந்திருவர்
நடிப்ப தருள்வது தாய்கர
மென்பர் நலமுடையர்
அடிப்ப துனதுசொல் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

31. கழல்வது வேண்டும் வினைப்பார
மென்று கழல்பிடித்தோம்
உழல்வது கண்டாய் உலகத்து
என்னை உனக்குமுன்னம்
சுழல்வது கண்டும் இரங்காமை
யுண்டோ சுடர்க்கொடியே
அழல்வது வேண்டவம் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

32. மாணிக்க வல்லி யபிடேக
வல்லி மலர்மகளிர்
காணிக்கு வந்து கரங்குவித்
தேத்தும் கருணைவல்லி
பேணிக்கை கூப்பும் அடியார்
குலத்தும் பெருவிளக்கே
ஆனிப்பொன் நல்குதி அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

33. கற்பூர வல்லி கருணா
ரசவல்லி கற்பவல்லி
பொற்பூரு மேனிப் புராதன
வல்லி புழுகுவல்லி
வெற்பூரு செல்வனை யீன்றருள்
வல்லி விமலவல்லி
அற்பூரும் இளஞ்சினை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

34. மானந்தம் ஆவியின் மேலாகக்
கொண்ட மணித்திருக்கே
தானந்தம் இல்லாத பேரின்ப
வாழ்வு தருந்திருவே
யானந்தம் இல்லாத நின்பாத
நீழல் இருக்கவருள்
ஆனந்தம் மோங்கிய அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

35. பெருகிய செல்வத்தைப் பெற்றுள
வெண்ணிப் பிறவிமுதல்
உருகிய வுள்ளத்தொ டுன்னையே
போற்றிய உத்தமர்க்கும்
கருகிய நெஞ்சின ராகி
வருந்தும் கசட்டினர்க்கும்
அருகினில் மேவுதி அங்கயற்
கண்ணரி அருள்வெள்ளமே.

36. தொடக்கமும் வாழ்வும் அழிவும்
தெரிவரும் தொல்பிறப்பின்
நடக்கவும் ஓடவும் பேசவும்
பாடவும் நாடகத்தே
கிடக்கவும் நிற்கவும் கற்றோரும்
மறந்தே கிரிசைகெட்டோம்
அடக்கமும் வேண்டுவெம் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

37. பெரியார்த் துணைகொளார் குற்ற
முடையேன் கொல்பேதையரை
உரியார் எனக்கொண்ட குற்ற
முளேன்சொல் உனதருளைத்
தெரியா தலமந்து தேம்பித்
திரிவேன் சிறுமைகண்டாய்
அரியார்த் தெழுபரி அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

38. இடைக்கல மல்லேன் பிறப்புத்
தொறுமுனை யேத்துகின்றேன்
படைக்கல மேந்தாத் தொழுகுலம்
வந்த பணிவுடையேன்
தடைக்கல மொன்று மிலேன்கண்ட
ருளுக தந்தருள்க
அடைக்கல வாழ்வினை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

39. வேண்டா வெறுப்போ டுலகினில்
வாழ விடாதிகண்டாய்
தூண்டா விளக்காகி நெஞ்சிடை
நன்கு சுடருதியே
தேண்டா திருப்பினும் நல்கிய
ருள்க திருவடியை
ஆண்டான் மணந்தருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

40. கல்லாக் கயவர் இணக்கம்
அழுத்தும் கசட்டினிலே
பொல்லாச் சிறுவனைத் தாயே
வெறுக்கும் புதுமையுண்டோ
இல்லாக் கொடுமை யொழித்தே
யடிமை யெனறேற்றருளாய்
அல்லாச் சியகுழல் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

41 தேன்றோய் மலர்களின் மாலை
தொடுத்துத் திருப்பணிசெய்து
ஊன்றோய் உணர்வற்ற நன்மக்கள்
நெஞ்சம் உவந்தருள்வாய்
மான்றோர் இனத்திடை யான்படும்
பாடு மதித்தனையோ
ஆன்றோர் புகழ்தரும் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

42. சந்தாப மின்றிய நெஞ்சத்தை
நல்குக சாசுவதீ
மந்தார மாலை கடம்போடு
சூடும் மனோன்மணியே
சிந்தா குலமறி யாதவர்
நல்லினம் சேர்த்தருள்வாய்
அந்தா ரணிகுழல் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

43. மறையோ லிடுங்குரல் கேட்டதன்
சென்னி வயங்கும்ன்னால்
பொறையோ டுமேன்மை சிறப்புப்
பொருந்திய புண்ணியர்தம்
நிறையோ வியம்பொரு நெஞ்சிடை
நின்ற நிலவொளியே
அறையோ பெருந்திறல் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

44. யாங்காண வெம்முளக் கோயில்
உவந்தே எழுந்தருள்க
மாங்காடு சூழ்ந்த மதுராபுரி
மக்கள் வாழ்வருள்வாய்
போங்கால மெண்ணி வருந்து
மணியேம் பொருமலற
ஆங்கார மாய்த்தருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

45. முடிமேவு பாண்டியர் நற்குலம்
வாழ முளைத்தெழுந்த
கொடியே தடாதகை யாகி
விளங்கிய கோமளையே
கடிமேவு வேம்பினைச் சூடி
யருட்காவல் காட்டுகின்றாய்
அடியேனை யேற்றருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

46. இருட்கடல் புக்குத் தலைகா
லறியா தியங்குகின்ற
மருட்கடல் மாந்தரைத் தெள்முக
நோக்கி வழிக்கழக்கும்
தெருட்கடல் ஞானப் பெருங்கடல்
தெய்வத் திருவிளங்கும்
அருட்கடல் அல்லைகொள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

47. ஓடிய வைம்பொறி தம்மை

யுளத்தே யுறவிழுத்துச்

சேடிய ராகித் திருமகள்

நாமகள் சேவைபெறும்

பாடிய பாட்டின் பொருளாகும்

அன்னை பதாம்புங்கள்

ஆடிய காணுதும் அங்கயற்

கண்ணி அருள்வெள்ளமே.

48. விடையார் கொடியினன் தோளுற

மாலிகை வேயுமன்னே

நடையார் துறவியர் நெஞ்சகக்

கோயில் நடமிடுவாய்

படையார் குமரர் இருவரை

யீன்ற பராபரையே

அடையார் உளரேகோ லங்கயற்

கண்ணி அருள்வெள்ளமே.

49. தரியவர் போல்வரு திக்பாலர்
மாளஞ் சரிந்தொழிய
எரிபடை யாதிய தாங்கிய
போர்க்கோலம் ஏற்றனையே
கரிமுகன் ஆறு முகனெறு
மைந்தரைக் கண்டுமகிழ்
அரியவன் போற்றிய அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

50. இந்துவை வெண்றொளிர் வாணுதல்
ஏந்தும் எழிற்கொடியே
தந்துவை வென்ற லிடைமேல்
இருகுன்று தாங்ககின்றாய்
பந்துகொல் என்ன மலையேந்தும்
வேலன் பரவன்னையே
அந்துணை வேறிலை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

51. மைந்தரைக் கண்டு மனமிரங்
காத மகளுமுண்டோ
சுந்தரப் பாண்டியன் மாலை
யவந்த சுருதிவல்லி
இந்திரச் செல்வம் அருள்வான்
உளங்கொளின் பார்தடுப்பார்
ஐந்திறப் பைங்குழல் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

52. பொருந்திய கல்வியும் செல்வமும்
பூக்கப் பொருத்துமன்னே
திருந்திய வாழ்க்கையில் யாம்வாழ
வைக்கும் திருவடியாம்
கருந்திரு நீள்விழி நோக்கத்தி
னெந்தமைக் காத்தருளாய்
அருந்திரு வாழ்கின்ற அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

53. அம்பலத் தாடினள் காளியை
வென்ற அருட்கடலை
அம்பரத் திக்கினள் என்பது
கண்டும் அவாவின்மணம்
செம்புனற் பாத்திரம் நாரண
ளேந்தத் திருவோடுகொள்
அம்புயப் பாதத்தி அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

•

54. நெடும்பெருங் காலம் கருவுட்
புகுந்து நிலைகுலைந்தேம்
அடும்பெரும் பாவிய ராகிய
ஐவரின் அல்லலுற்றேம்
இடும்பெருங் கையும் அருள்பெருங்
கண்களும் ஏற்றவள்ளே
அடும்பவம் போக்குதி அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

55. இவனெனக் காட்டி விளக்கற்
கரிய இறையவனை
உவனென வேதங்கள் ஓதி
மறைத்த உருவின்னைத்
தவனென வேற்றதவச் செல்வி
ஞான தபோநிதியே
அவனென நாட்டுக அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

56. செல்ல லொழில்கென வேண்டுவர்
அன்பர் தினந்தினமே
மல்லல் அருள்வாழ்வு நல்கென
வேண்டுவர் மற்றவரே
வெல்லல் எமக்கரு ளென்றுனை
வேண்டுவர் வேறுசிலர்
அல்ல லாற்றுக அங்கயற்
கண்ணி அருளவெள்ளமே.

57. நோய்வரு மென்பது நின்னடி
பற்றிய நோன்பினர்க்கு
தாய்தரு தண்டனை மக்கட்
கெனநினை சாந்தியருள்
வாய்தர நெஞ்சு நிறைதர
நின்ற மனோன்மணியே
ஆய்தர வேண்டுங்கொல் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

58. இம்மாய வாழ்விடை யின்பமுண்
டென்ன இருப்பவர்க்கு
வெம்மாய வல்வினை செய்யும்
கொடுமை விலக்குதியால்
தம்மாய வாழ்வை மறந்துநின்
பாதங்கள் சார்ந்தவரை
அம்மா மறத்திகொல் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

59. மதிநுதல் செந்தா மரைமுகம்

மீன்பொரு வாள்விழியாய்

பதிதனை மெய்ம்மைப் பதியென

வேற்ற பராபரையே

கதிதனை வேண்டுமுன் நல்கி

யருளும் கழலினையே

அதிமன கோசரி அங்கயற்

கண்ணி அருள்வெள்ளமே.

60. நறவம் பொழியும் மலரணி

கோதை நளினவல்லி

மறவர் பணிபுரி பாண்டிய

நாட்டு மதுரையுளாய்

துறவர் குலந்தொழு சோபன

நாயகி சொக்கலெனும்

அறவன் மனைத்துணை அங்கயற்

கண்ணி அருள்வெள்ளமே.

61. அங்குச பாசம் பிடித்த
மகனோ டாறுமுகனைச்
செங்கனி மாம்பழம் காரண
மாகச் செருவிழைத்த
சங்கரன் மாளிகை சூடிய
பெண்மயில் சாந்துமுளாய்
அங்கலும் மேனியை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

62. பெருமையை ஞானப் பெருமை
யடியார் பெறவருள்வாய்
கருமையை மாயக் கருமை
யடியார் கழலவைப்பாய்
உரிமையை என்றும் அடியார்
மனத்தை உரிமைகொள்வாய்
அருமையை யேனையர் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

63. கடுந்திரள் கண்டனை உத்திரப்
பூருவம் கண்டுகொண்டாய்
மடுத்தெதிர் வையையை அன்பன்
பருக வகைசெய்தனை
உடுத்திரள் வானத்து வாழ்வினர்
போற்ற உவந்தளிப்பாய்
அடுத்தவர் அன்புறு அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

64. சாய்ந்த தலைக்கதிர் செல்வம்
வளர்க்கும் தமிழகத்தாய்
காய்ந்த பகைவரும் பாதம்
பணிந்தேத்து கைதவையே
தேய்ந்த மருங்குல் அழகனுக்
கேவல் செயவளித்தாய்
ஆய்ந்த புலமையை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

65. தேற்ற மிதுவெனக் கொள்கைகள்
தோறும் தெளிவுறுவாய்
மாற்ற மனமிறந் தோங்கிய
தேவன் மனம்புகுவாய்
கூற்றம் வணங்கிய சேவடி
யான்பணி கொண்டவர்பே
ஆற்ற விரங்குறி அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

66. துணிவு மிகுந்த வவுணரும்
ஆகவம் சோர்வுறவே
தணிவில் படையேந்து மெல்லிய
லார்படை தாங்கிறைவீ
கணியும் மசிழும் கடம்பும்
வளர்வுறு காமதுரை
அணியும் அரசினை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

67. பார்க்கோ புனற்கோ கனற்கோ
வளிக்கோ பரவுவிண்ணின்
ஊர்க்கோ அரசியல் நாட்ட
நெருப்புள் உடலெடுத்தாய்
கார்க்கோ மழைக்கோ டுறையறி
யாத கவின்தமிழ்நாட்டு
ஆர்க்கோ அருளுதி அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

68. பனிமால் வரையிற் பிறந்து
விளையாடு பைங்குழவீ
முனிவோர் வணங்க மறைமேல்
விளங்கிய மொய்குழலி
தனிவேல் மலரக் கொடியிறை
வேண்டத் தவழ்ந்துவந்தாய்
அணிகேற் நாயகி அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

69. குழகா குமரா மலைவாழ்
தலைமை கொளுமிறையே
அழகா எமர்செல்வ மாகும்
கயற்கண் அரசியினை
விழவா மணத்தே யணை
விண்டு விழைந்திரக்க
அழகால் மணந்தன அங்கயற்
கண்ணி அருள் வெள்ளமே.

70. எப்பா வலரும் இறைஞ்சிப்
பராவும் இறைமையினாய்
முப்பால் தெளிந்து பெருவீடு
போக முயலுமவர்
தப்பா துணரத் தகும்பொரு
ளோதுந் தலைமையினால்
அப்பா லெழுந்தனை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

71. குறியே குணமே கடந்த
பொருளைக் குறுகிநிற்பாய்
நெறியே முடியே தெளியாத
மாந்தர் நிலைதெளிந்து
பொறியே புலனே யடக்கிப்
பொருளினைப் போதிப்பையே
அறியே னினதருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

72. அம்பே பொருவிழி அம்போ
ருகமுகத் தாரணங்கே
வம்பே மறைத்த வயோதர
மேந்து மலர்வல்லியே
கம்பே நிகர்களம் செம்பே
ரிதழ்கொளும் கண்ணினியாய்
அம்பே சிலைகொளும் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

73. அல்லாடு பூங்குழல் மேல்முடி
யேறும் அழகுடையாய்
நெல்லாடு நீள்வயல் சூழ்தமிழ்
நாட்டின் நிறைசெல்வியே
சொல்லாடு பாவலர் நாமேல்
நடந்த சுடர்க்கொடியே
அல்லாட லாடுங்கொள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

74. நாகாப்ப நன்கறி யாதவர்
அன்னையிஞ் ஞாலத்திலே
சோகாப்ப ரென்றனர் வள்ளுவ
ரென்ற தொழுதன கயர்
மாகாப்ப மக்களை மங்களு
மாக்களை வாழ்விப்பர்காண்
ஆகாப்ப துன்செயல் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

75. ஏம்பல் மிகுந்த குடிகள்
மலிந்த இருந்தமிழ்நாடு
ஓம்பல் பணியென் வேற்றருள்
செங்கோ லுரிமையினாய்
வேம்பல் மலரை விரும்பாது
வேம்பு விரும்பினையே
ஆம்பல் நிகர்முகத் தங்கையற்
கண்ணி அருள்வெள்ளமே.

76. நேராரை வாட்டுதி நேர்ந்தா
ரைக்காத்து நிலைநிறுத்தி
ஓராத வுண்மைகள் உள்ளம்
புகுத்தி யுவப்பளித்தி
தேராத நாயேம் சிறுமை
யொழித்துச் சிறப்பளித்தி
ஆராத வமுதமே அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

77. வன்பர்க்கு வம்பர்க்கு வண்டர்க்குக்
குண்டர்க்கு மாற்றவர்க்குத்
துன்பத்தை யீந்து புடம்போட்
டெடுக்கும் தொழிலுடையாய்
நன்பர்க்கு நண்பர்க்கு நாட்ட
மனமுடை நாட்டினர்க்கே
அன்பத் திருநல்கும் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

78. எங்குந் துருவினர் தேடினர்
நாடினர் எய்தலராய்ப்
பொங்குந் திருவருட் பேரொளி
காணேம் புவியிலென்பர்
மங்குந் திருவினர் நின்னருட்
பேற்றினை வாய்த்தனரோ
அங்கும் தெளிகும் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

79. கணவற் குரிய திருப்பணி
பூண்ட கடமுடையாய்
பிணவர் குழு வொடுணியம்
களிறு பிரிந்துசெலும்
நுணவத் தருநிறை கானம்
சிறந்து றுன்துநிலம்
அணவத் தகுந்தகை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

80. நூற்கோள் விளக்கிய தேவனை
வேட்ட நுடங்கிடையே
மேற்கோள் கொடுக்கும் பிறைமேல்
நடம்புரி மெல்லடியாய்
சூற்கோள் மலிந்த முகில்சூழ்
தமிழகஞ் சூழ்கொடியே
ஆற்கோள் பிரான்புணர் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

81. ஞாலம் பிறந்து வளர்வது
நின்னருள் நாட்டத்தினால்
கோலம் பிறங்கு திருமேனி
கொண்ட குலாங்கனையே
சீலம் பிறந்து விளங்கிய
வாழ்க்கையை செங்கையினால்
ஆலம் கரந்தபாத அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

82. தொடையார் மலர்க்கோவை முத்தொளிர்
மாலை சுடர்களத்தாய்
படையார் கரத்திடைச் செங்கோல்
பிடித்தருள் பண்பினையே
நடையார் புலவர் மனத்திடை
யேறி நடித்தருள்வாய்
அடையார் வணங்கிய அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

83. இருளோ ஒளியோ நிலையோ
நிலையாமை யென்பதுவோ
பொருளோ புகழோ கலையோ
கலாத புகழ்ச்செருக்கோ
தெருளோ மருளோ எதைவேண்டி
நின்னடி சேருதும்யாம்
அருளோ குவிந்தியங் கங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

84. நாற்றங் கமழும் புதுமலர்
தேடி நயந்துருகிப்
போற்றுங் குழுவினர் சேவக
மேற்றருள் பூங்கொடியே
காற்றுங் கமழும் தமிழ்ப்பாண்டி
நாட்டினைக் கரத்தருள்
ஆற்றும் செயலுனை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

85. உலகம் பலகோடி ஆச்சினை
காத்தே யொடுக்கவல்லாய்
கலகம் புரியும் மதவாதி
காணாத காட்சிதந்தே
இலகும் திருவாட்டி மதுரை
யரசாட்சி யேற்றதுநின்
அலசில் அருளென்பம் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

86. குமுதம் பொருவும் திருவாய்
மலராற் குறிப்பரிய
அமுதந் தனைநன்கு தேற்றித்
தெளித்தருள் அம்பிகையே
சுமுகம் கொடுவின் அடியார்க்
கருள்புரி தோற்றத்தையே
அமுதம் பெருங்கோலோ அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

87. மடிமைக்கு வாழ்க்கைப் பகையாள
தீமைக்கு வஞ்சனைக்கு
மிடிமைக்கு மேதக வெண்ணாத
சின்மை விழுநிலைக்கு
குடிமைக்கு மாருகச் செல்லும்
அடியேம் குறைதவித்தே
அடிமைக்கு வந்தருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

88. முருகனை வேழ முகத்தனைப்
போற்று முறைதெளிந்தோய்
தருகென வேண்டிரின் தாண்மலர்
முன்பு தணிவதுண்டோ
உருகுரு வாகிய மைந்தரைப்
போற்றும் உரிமையிலே
அருகுளர் ஆகுலர் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

89. தேடிய செல்வத்தை அன்பினர்
எய்துந் திரவருளால்
ஓடிய வுள்ளம் பொறிபுலன்
தன்பால் உறப்புரியும்
ஆடிய பாதத்தன் கோலத்தைக்
கண்டே அகமுருகி
ஆடிய பாதத்தி அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

90. இந்தோ செங்கதிர் ஒள்ளெரி
யம்பகம் என்றுகொண்ட
சந்திர சேகரன் வாமத்தைக்
கொண்ட தவச்செல்வியே
அந்தணர் ஓதிய வேதங்கள்
கேட்டே அருள்புரிவாய்
ஐந்தொழில் பூண்டருள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

விரிகுழல் நன்மணம் பூமணம் 91
யாவையும் வெல்லுமென்றே
அரிகளை வென்ற வழுதிமுன்
கூறி அவன்கொடுத்த
பெரிய கிழியைத் தருமிக்
களித்த பிரான்துணையே
அரியது முண்டுகொள் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

மாதுவ வேடம் புனைந்து 92
மருக வணிகனுக்கு
ஞாதியர் தாராத செல்வத்தை
வாங்கி நயந்தளித்த
காதலன் கைதொடச் செம்மை
நெறிக்கும் கமழ்முகத்தாய்
ஆதுலர் ஆகிவெம் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

93. பிட்டுக்கு மண்சுமந்து தாற்றிடை
வெள்ளம் பிறழ்வதையும்
கட்டுக்குள் வைத்த கருணைப்
பெருமாள் கரம்பிடித்த
எட்டுக்கு மேற்படும் திக்கினை
வென்ற எமரிலறவீ
சுட்டுக் குவித்தனை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

94. குண்டோ தரனெனும் பூத
கணத்தான் கொடும்பசிக்கே
கண்டோர் வியப்புற அன்னக்
குழிகாட்டு கையுடையாள்
வண்டோள் மாலிகை வேணியள்
பாத மலர்பணிவாய்
அண்டோ மகல்கிலோம் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

95. பாணுக்குப் பாட்டுரைத் தோங்குபுகழ்ச்
சேரல் பார்க்கவென
ஊணுக்கு யிருக்கு யாழிசைத்
தேசெலும் உத்தமனைக்
காணற் குரிய கடமையும்
கற்பித்த கண்ணுதலின்
ஆணுக் குரிமையை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

96. கமலத் திருமகள் நாமகள்
ஏத்திய காரிகையே
முமலத் திருக்கிடை மாந்தர்
கிடந்து முழுகுவரை
விமலத் திருக்கினி னோக்கி
யருள்புரி வித்தகத்தாய்
அமலப் பிரான்புணர் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

97. முன்னாள் நினைப்போற்று பாவாணர்
வாக்கில் முழல்சினையே
நன்னாள் அதுவென்றும் தீநாள்
இதுவென்றும் நாட்டினையோ
சென்னாள் பலகண்ட நின்னடி
யார்க்கின்றும் திம்பியத்தை
அன்னாய் அருளாக அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

98. எழுத்தோ அசையோடு சீரோ
தளையோ இயலடியோ
பழுத்தோடு சொற்பொரு ளோவிய
மோநினைப் பற்றியவர்
வழுத்தோதை கேட்டதும் வாக்கின்
வருவித்து வாழ்விம்மையே
அழுத்தோ டுருவினை அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

99. நீற்றைப் புனைந்து சுடலையி
லாடிய நின்மலனார்
கூற்றைக் கவர்ந்த கொடியே
வரமொன்று கொள்ளவருள்
பேற்றைத் தரவல்ல நின்பதப்
போது பிடித்துளயாம்
ஆற்றைப் புகவைத்தி அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

100. கங்கையைச் செஞ்சடைக் காட்டு
ளடக்கிய கண்ணுதலின்
செங்கையைப் பற்றிய தேவி
திரிபுரை செந்தமிழ்த்தாய்
சங்கையைப் போக்கி யறிவருள்
பாத சரோருகத்தாய்
அங்கையைக் கோத்தவும் அங்கயற்
கண்ணி அருள்வெள்ளமே.

## வாழ்த்து

வாழிய சொக்கப் பெருமான் திருவடி மாமலரே
வாழிய அங்கயற் கண்ணி திருவடி மாமலரே
வாழிய தண்டமிழ் வாழிய ஆரியம் வாழிமறை
வாழிய தெய்வ நினையும் மனத்தினர் மாநிலத்தே.

# பின்னிணைப்புகள்

## சொல்லடைவு


அடி (98:1)
அகம் (18:1)
அங்கயற்கண் அம்மை (0:3)
அங்கயற்கண்ணி (1:4)
அங்குசம் (61:1)
அங்கை (100:4)
அசை (98:1)
அடியார் (4:3)
அடைக்கலம் (38:3)
அந்தணர் (90:3)
அந்தாரணி (42:4)
அபிடேகவல்லி (32:1)
அமிழ்து (0:2)
அமுதம் (76:4)
அம்பகம் (90:1)
அம்பலம் (53:1)
அம்பிகை (86:2)
அம்பு (72:1)
அம்புயம் (53:4)
அம்போருகம் (72:1)
அம்மா (59:1)
அரசாட்சி (85:3)

அரசி (66:4)
அரசியல் (67:1)
அரி (91:2)
அரியவன் (49:4)
அரியார் (37:4)
அருமை (21:4)
அருள் (1:1)
அருட்கடல் (53:1)
அருமை (62:4)
அருள் (0:3)
அரோக்கியம் (16:4)
அவுணர் (66:1)
அழகப்பிரான் (21:1)
அழகன் (64:3)
அழகா (69:2)
அழிவு (36:1)
அறவன் (60:4)
அன்பர் (56:1)
அன்பன் (63:2)
அன்பு (4:4)
அன்னாய் (97:4)
அன்னை (47:3)
ஆகமம் (66:1)
ஆங்காரம் (44:4)
ஆண் (95:4)

ஆண்டான் (39:4)
ஆத்தன் (10:4)
ஆம்பல் (75:4)
ஆரணம் (7:4)
ஆரியம் (101:3)
ஆலம் (82:1)
ஆவி (34:1)
ஆறு (99:4)
ஆறுமுகன் (49:3)
ஆற்கோள் (80:4)
ஆற்றல் (5:4)
ஆனந்தம் (34:4)
ஆனிப்பொன் (32:4)
ஆன்றோர் (41:4)
இசைப்பாட்டு (28:2)
இடை (50:2)
இருள் (83:1)
இருகுன்று (50:2)
இருட்கடல் (46:1)
இருவர் (48:3)
இறை (68:3)
இறையவன் (55:1)
இன்பம் (1:3)
இன்மொழி (26:1)
உண்மை (76:1)

உத்தமர் (35:2)
உத்தமன் (95:2)
உயிர் (20:2)
உரிமை (62:3)
உலகம் (85:1)
உலகு (18:1)
உவப்பு (76:1)
உளம் (18:1)
உள்ளம் (35:2)
ஊண் (95:2)
எட்டு (93:3)
எரிபடை (49:2)
எழில் (6:3)
எழில்கொடி (4:2)
எழுத்து (98:1)
என்பு (4:1)
ஏந்தல் (16:2)
ஏம்பல் (75:1)
ஐந்திறம் (51:4)
ஐந்தொழில் (90:4)
ஐம்பொறி (47:1)
ஐயை (24:4)
ஐவர் (54:2)
ஒளி (83:1)
ஒம்பல் (75:2)

ஓவியம் (98:2)
கலை (83:2)
கங்கை (100:1)
கசடு (8:3)
கசட்டினர் (36:1)
கடமை (95:3)
கடல் (10:3)
கடும்படை (27:1)
கணவர் (79:1)
கணி (24:1)
கண்கள் (54:3)
கமலம் (96:1)
கமழ் (2:3)
கயல் (12:2)
கயவர் (40:1)
கயற்கண் (69:2)
கரம் (82:2)
கரிமுகன் (49:3)
கரு (54:1)
கருங்குயில் (28:1)
கருணாரசவல்லி (33:1)
கருணை (27:2)
கருணைவல்லி (21:2)
கருமை (62:2)
கரும்பு (26:1)

கலகம் (85:2)

கல்வி (52:1)

கவி (2:1)

கவின் (67:3)

கழல் (31:1)

களவு (20:1)

களிறு (79:2)

கள்ளர் (20:2)

கற்பவல்லி (33:1)

கற்பூரவல்லி (33:1)

கற்றோர் (36:3)

கனல் (67:1)

காட்சி (85:2)

காதலன் (92:3)

காரிகை (96:1)

கார் (67:3)

காளி (27:1)

காற்று (84:3)

கானம் (79:3)

கிழி (91:3)

குடிகள் (75:1)

குடிமை (87:3)

குணக்கடல் (23:1)

குணம் (11:1)

குண்டோதரன் (94:1)

குமரர் (48:3)
குமரா (69:1)
குமுதம் (86:1)
குலம் (3:4)
குழகா (69:1)
குழல் (6:4)
குழவி (22:3)
குழு (79:2)
குழுவினர் (84:2)
கூந்தல் (5:1)
கை (54:3)
கொடி (45:2)
கொடுமை (40:3)
கோமளவல்லி (23:1)
கோமளை (45:2)
கோயில் (44:1)
கோலம் (81:2)
சகாயன் (9:1)
சங்கரன் (61:3)
சங்கு (100:3)
சந்திரசேகரன் (90:2)
சமநிலை (2:1)
சற்குணம் (8:2)
சாசுவதீ (42:1)
சிலர் (56:3)

சிறப்பு (76:3)
சிறியேன் (22:3)
சிறுவன் (40:2)
சீதரன் (9:1)
சீர் (98:1)
சீலம் (81:3)
சுடலை (99:1)
சுடர் (82:1)
சுடர்கொடி (9:2)
சுடர்விழி (4:3)
சுந்தரப்பாண்டியன் (51:2)
சுருதி (12:1)
சுருதிவல்லி (51:1)
செங்கதிர் (90:1)
செங்கனி (61:2)
செங்கை (81:3)
செங்கோல் (75:2)
செந்தமிழ்த்தாய் (100:2)
செம்புனல் (53:3)
செம்மை (92:3)
செருக்கு (83:2)
செல்வம் (52:1)
செல்வன் (33:3)
செல்வி (0:1)
செறிவு (2:1)

| | |
|---|---|
| சென்னி | (43:1) |
| சேடியர் | (47:2) |
| சேரல் | (95:1) |
| சேவகம் | (84:2) |
| சேவடி | (65:3) |
| சொக்கப்பெருமான் | (101:1) |
| சொல் | (30:1) |
| சொற்பொருள் | (98:2) |
| சோபன நாயகி | (60:3) |
| ஞாதியர் | (92:2) |
| ஞாலம் | (74:1) |
| ஞானவல்லி | (15:2) |
| தடாதகை | (45:2) |
| தண்டமிழ் | (101:3) |
| தண்மனை | (57:2) |
| தமிழகத்தாய் | (64:1) |
| தமிழகம் | (80:3) |
| தமிழன் | (3:1) |
| தமிழ் | (0:1) |
| தமிழ்நாடு | (73:2) |
| தமிழ்ப்பாடல் | (4:1) |
| தமிழ்ப்பாண்டி நாடு | (84:3) |
| தரியவர் | (49:1) |
| தருமி | (91:3) |
| தலைமை | (70:3) |

தவச்செல்வி (90:2)
தளை (98:1)
தாண்டவம் (3:1)
தாய் (19:1)
திக்கலர் (27:3)
திருப்பணி (79:1)
திருமகள் (47:2)
திருமணக்காட்சி (26:2)
திருவடி (52:2)
திருவாய் (86:1)
தினம் (56:1)
தீநாள் (97:2)
தீமை (87:1)
துணிவு (66:1)
துயரம் (22:3)
துர்க்கை (27:1)
துறவர் (60:2)
துறவியர் (48:2)
தூண்டா விளக்கு (39:2)
தெருள் (83:3)
தெளிவு (2:1)
தென்திசை (29:2)
தேவர் (9:1)
தேவன் (3:1)
தேவி (16:3)

| | |
|---|---|
| தேற்றம் | (65:1) |
| தேன் | (12:1) |
| தொடக்கம் | (36:1) |
| தொடை | (13:1) |
| தொல்பிறப்பு | (36:1) |
| தொழில் | (77:2) |
| தோள் | (48:1) |
| தோற்றம் | (86:3) |
| நங்கை | (3:3) |
| நண்பர் | (77:3) |
| நம்பன் | (3:3) |
| நளிவு வல்லி | (7:3) |
| நளின வல்லி | (60:1) |
| நற்றமிழ் | (10:1) |
| நன்பர் | (77:3) |
| நா | (73:3) |
| நாடகம் | (36:2) |
| நாமகள் | (47:2) |
| நாமகள் | (96:1) |
| நாயகி | (5:1) |
| நாரணன் | (7:3) |
| நாற்றம் | (84:1) |
| நான்முகன் | (7:3) |
| நிலம் | (79:3) |
| நிலம் | (5:3) |

நிலவொளி (43:3)
நிலையாமை (83:1)
நீர் (8:2)
நீழல் (34:3)
நீள்விழி (52:3)
நீறு (99:1)
நுண்மை (1:1)
நூற்கோள் (80:1)
நெஞ்சகம் (6:1)
நெஞ்சினர் (23:3)
நெஞ்சு (57:3)
நெடியான் (14:1)
நெறி (71:1)
நோய் (57:1)
நோன்பு (1:1)
பகைவர் (64:2)
பங்கயம் (0:4)
பரமேசன் (25:2)
பரம்பொருள் (18:3)
பராமரை (48:3)
பலகோடி (85:1)
பனி (68:1)
பாண் (95:1)
பாண்டியர் (45:1)
பாத்திரம் (53:3)

| | |
|---|---|
| பாதம் | (16:2) |
| பார் | (67:1) |
| பாவலர் | (2:2) |
| பாவி | (54:2) |
| பிட்டு | (93:1) |
| பிணவர் | (79:2) |
| பிணி | (14:3) |
| பிறவி | (35:1) |
| பிறை | (80:2) |
| புகழ் | (83:2) |
| புண்ணியர் | (43:2) |
| புதுமலர் | (84:1) |
| புதுமை | (40:2) |
| புராதனவல்லி | (33:2) |
| புருவம் | (63:1) |
| புலன் | (71:3) |
| புலமை | (64:4) |
| புலவர் | (4:1) |
| புவி | (78:2) |
| புழுகுவல்லி | (33:2) |
| புனல் | (67:1) |
| பூங்குழல் | (23:1) |
| பூங்கொடி | (84:2) |
| பூதகணத்தான் | (94:1) |
| பூரணம் | (7:1) |

பூரணி (18:3)

பூரணியே (7:1)

பெண்மயில் (11:3)

பெரியார் (37:1)

பெருங்கடல் (46:3)

பெருமை (62:1)

பெருவிளக்கு (32:4)

பேதையர் (37:1)

பேரிதழ் (72:3)

பேரின்பம் (34:2)

பேரோளி (78:1)

பேறு (99:3)

பைங்குழலி (68:1)

பொருள் (83:2)

பொருளுரை (29:1)

பொலங்கொடி (3:2)

பொறிபுலன் (89:2)

பொற்குடம் (8:1)

பொற்கொடி (29:1)

போர்க்கோலம் (49:2)

மண் (93:1)

மகளிர் (32:1)

மகள் (51:1)

மகன் (0:3)

மக்கள் (41:2)

| | |
|---|---|
| மணம் | (24:3) |
| மணித்தரு | (34:1) |
| மதவாதி | (85:2) |
| மதிநுதல் | (59:1) |
| மதுராபுரி | (44:2) |
| மதுரை | (0:1) |
| மந்தாரமாலை | (42:2) |
| மயில் | (6:1) |
| மருள் | (83:3) |
| மலர் | (5:1) |
| மலர்க்கோவை | (82:1) |
| மலர்வல்லி | (72:2) |
| மலை | (13:2) |
| மழை | (67:3) |
| மறவர் | (60:2) |
| மறை | (101:3) |
| மறைதேர் | (0:2) |
| மனம் | (5:3) |
| மனோன்மணி | (42:2) |
| மாக்கள் | (74:3) |
| மாங்காடு | (44:2) |
| மாணிக்கவல்லி | (32:1) |
| மாதர் | (28:2) |
| மாது | (1:3) |
| மாநிலம் | (101:4) |

மாந்தர் (96:2)
மாமலர் (101:1)
மாமுனி (29:1)
மாம்பழம் (61:2)
மாயவன் (21:2)
மால் (68:1)
மாலிகை (94:3)
மாலை (82:1)
மீன் (13:2)
முகில் (80:3)
முப்பால் (70:1)
முப்பொருள் (70:3)
முருகன் (88:1)
முனிவர் (25:1)
முனிவோர் (68:2)
மூத்தவன் (14:1)
மூரல் (26:4)
மெய்ப்பொருள் (13:3)
மெய்ம்மை (59:2)
மெல்லியலார் (66:2)
மெல்லியல் (13:1)
மேதகையோர் (2:3)
மேற்கோள் (80:2)
மேனி (61:4)
மைந்தர் (88:3)
மொய்குழலி (68:2)

| | |
|---|---|
| யாப்பு | (23:2) |
| யாழிசை | (95:2) |
| வஞ்சனை | (87:1) |
| வணிகன் | (92:1) |
| வண்மை | (28:3) |
| வம்பர் | (77:1) |
| வயல் | (73:2) |
| வரம் | (99:2) |
| வலி | (6:3) |
| வள்ளல் | (17:2) |
| வள்ளுவர் | (74:2) |
| வளி | (67:1) |
| வன்பர் | (77:1) |
| வாக்கு | (98:3) |
| வாமம் | (90:2) |
| வாமம் | (25:2) |
| வாய் | (19:3) |
| வாழ்க்கை | (52:2) |
| வாழ்வு | (29:3) |
| வாள்விழி | (59:1) |
| விடையார் | (48:1) |
| விண் | (67:1) |
| விண்ணவர் | (26:2) |
| விமலவல்லி | (33:3) |
| விரதம் | (3:2) |

விரதியர் (6:1)

விழி (1:2)

வினை (58:1)

வெண்மதி (20:3)

வெள்ளம் (93:1)

வேடம் (92:1)

வேதங்கள் (90:3)

வேம்பல் (75:3)

வேம்பு (45:3)

வேலன் (50:3)

வேழமுகத்தன் (88:1)

வையை (63:2)

# அருஞ்சொற்பொருள்

**எண்: பாடல் எண்**

| | |
|---|---|
| அங்குசம்-யானைத்தொட்டி | (61:1) |
| அம்பலம் - தில்லையம்பலம் | (53:1) |
| அம்புயம் - தாமரை | (53:4) |
| அம்போருகம் - தாமரை | (72:1) |
| அல்லை - கொடிவகை | (46:4) |
| அவுணர் - அசுரர் | (66:1) |
| அழல் - நெருப்பு | (31:4) |
| ஆதரம் - ஊர் | (9:4) |
| ஆதுலர் - வறியவர் | (92:4) |
| ஆத்தன் - அருகன் | (10:4) |
| ஆரணம் - வேதம் | (7:4) |
| ஆலவாய் - பாம்பு | (1:4) |
| ஊண் - உணவு | (95:2) |
| எல் - சூரியன் | (15:3) |
| ஏந்தல் - தேக்கம் | (16:1) |
| ஏம்பல் - களிப்பு | (75:1) |
| ஏவல் - வறுமை | (64:3) |
| ஓம்பல் - பாதுகாத்தல் | (75:2) |
| கசடு - குற்றம் | (8:3) |
| கடம்பு - தீங்கு | (42:2) |
| கமலம் - தாமரை | (96:1) |

| | |
|---|---|
| கயல் - கெண்டைமீன் | (12:2) |
| கயவர் - கொடியவர் | (40:1) |
| கரம் - ஒளி | (30:1) |
| கவின் - அழகு | (67:3) |
| கழல் - சிலம்பு | (31:1) |
| கனல் - நெருப்பு | (67:1) |
| காணி - நிலம் | (32:2) |
| கார் - நீர் | (67:3) |
| கானம் - காடு | (79:3) |
| கிரிசை - பார்வதி | (36:3) |
| குழல் - கூந்தல் | (6:5) |
| குழவி - கைக்குழந்தை | (22:1) |
| கூற்றம் - வார்த்தை | (65:3) |
| கோல் - செங்கோல் | (1:4) |
| சகாயன் - உதவிசெய்வோன் | (9:1) |
| சந்தாபம் - மனத்துன்பம் | (42:1) |
| சமர் - போர் | (2:1) |
| சாரு - அழகு | (25:4) |
| சாந்தி - அமைதி | (57:2) |
| சின்மை - சிறுமை | (87:2) |
| சீலம் - ஒழுக்கம் | (81:3) |
| சுடலை - மயாணம் | (99:1) |
| சுருதி - ஒலி | (12:1) |
| செய் - வயல் | (24:2) |
| சேடியர் - ஏவல் செய்பவர் | (47:2) |
| சேவகம் - யானைக்கூடம் | (84:2) |

ஞாதியர் - சுற்றத்தார் (92:2)
தடாதகை - மீனாட்சி தேவி (45:2)
தனயர் - மகன் (19:1)
திகிரி - சக்கராயுதம் (9:1)
திக்கலர் - கதியற்றவர் (27:3)
திக்கயம் - ஐராவதம் (8:1)
திறல் - வலி (43:4)
தெருள் - ஞானம் (83:3)
தேற்றம் - தெளிவு (5:2)
தொல் - பழைய (36:1)
தொடி - வளைவு (14:2)
நம்பன் - சிவன் (3:3)
நறவம் - தேன் (60:1)
நாற்றம் - மணம் (84:1)
நுதல் - நெற்றி (59:1)
பங்கயம் - தாமரை (0:4)
பிணி - நோய் (14:3)
புடம் - இடம் (77:2)
புனல் - நீர் (53:3)
பூரணி - சிவசக்தி (18:3)
பூரணம் - முழுமை (7:1)
பொறை - பூமி (43:2)
மடிமை - சோம்பு (87:1)
மண்டலம் - பூமி (15:3)
சுடலைமயானம் (99:1)

மருங்குல் - இடை (64:3)
மல்லல் - மிகுதி (56:2)
மறை - வேதம் (0:2)
மன்பதை - மக்கட்பரப்பு (13:2)
மிடி - துன்பம் (14:3)
முகில் - மேகம் (80:3)
முறி - துண்டு (13:3)
முன்னம் - மனம் (31:2)
மூரல் - பல் (26:4)
வளி - காற்று (67:1
வாமம் - அழகு (25:2)
விண் - ஆகாயம் (67:1)
வினை - தொழில் (58:2)
வித்தகர் - பேரறிவாளர் (96:3)
விரதியர் - துறவியர் (6:1)
விழல் - பயனின்மை (14:3)
வெண்ணி - சோணாட்டதோர் ஊர் (35:1)
வேம்பு - வெறுப்பு (45:3)
வேழம் - யானை (88:1)

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

## எண்: செய்யுள் எண்


அங்குச பாசம் (61)
அடிப்ப தணைப்பது (30)
அம்பலத் தாடினள் (53)
அம்பே பொருவிழி (72)
அல்லாடு பூங்குழல் (73)
ஆரிடம் பாடும் (25)
இடைக்கல மல்லேன் (38)
இந்தோ செங்கதிர் (90)
இந்துவை வெண்றொளிர் (50)
இம்மாய வாழ்விடை (58)
இருளோ ஒளியோ (83)
இருட்கடல் புக்குத் (46)
இவனெனக் காட்டி (55)
உலகம் பலகோடி (85)
எங்குந் துருவினர் (78)
எப்பா வலரும் (70)
எழுத்தோ அசையோடு (98)
என்பை யுருக்கும் (4)
என்னால் நினைநுரு (18)
ஏம்பல் மிகுந்த (75)
ஓடிய வைம்பொறி (47)

கங்கையைச் செஞ்சடைக் (100)
கடுந்திரள் கண்டனை (63)
கடும்படை வேண்டிய (27)
கணவற் குரிய (79)
கமலத் திருமகள் (96)
கருங்குயில் பாடும் (28)
கரும்பினு மின்மொழிக் (26)
கல்லாக் கயவர் (40)
கழல்வது வேண்டும் (31)
களவைப் பெருக்கிக் (20)
கற்பூர வல்லி (33)
குண்டோ தரனெனும் (94)
குமுதம் பொருவும் (86)
குரவணி பூங்குழற் (23)
குழகா குமரா (69)
குறியே குணமே (71)
கோத்த முவந்தனை (10)
சந்தாப மின்றிய (42)
சாய்ந்த தலைக்கதிர் (64)
சீதா னாரணன் (9)
செந்தே னிகர்க்கும் (12)
செம்மேனி மைந்தர் (17)
செல்ல லொழில்கென (56)
செறிவு தெளிவு (2)
சொல்லாட வல்ல (15)

சொல்லா விரதியர் (6)
ஞாலம் பிறந்து (81)
தமிழ்மதுரை வாழவந்த (0)
தரியவர் போல்வரு (49)
தருங்குணம் பூண்ட (11)
தாண்டவ மாடிய (3)
தாயே யெனச்சொலிப் (19)
துணிவு மிகுந்த (66)
தேடிய செல்வத்தை (89)
தேற்ற மிதுவெனக் (65)
தேன்றோய் மலர்களின் (41)
தொடக்கமும் வாழ்வும் (36)
தொடையார் மலர்க்கோவை (82)
நறவம் பொழியும் (60)
நாகாப்ப நன்கறி (74)
நாற்றங் கமழும் (84)
நாற்றம் வளரு (5)
நீரோக் கியகடல் (16)
நீற்றைப் புனைந்து (99)
நூலவா நுண்மை (1)
நெடியானை மூத்தவ (14)
நெடும்பெருங் காலம் (54)
நேராரை வாட்டுதி (76)
நோய்வரு மென்பது (57)
பனிமால் வரையிற் (68)

பாணுக்குப் பாட்டுரைத் (95)
பார்க்கோ புனற்கோ (67)
பாளினைந் தெய்வம் (22)
பிட்டுக்கு மண்சுமந்து (93)
பூரண மொன்றென (7)
பெரியார்த் துணைகொளார் (37)
பெருகிய செல்வத்தைப் (35)
பெருமைக் குரிய (21)
பெருமையை ஞானப் (62)
பொருந்திய கல்வியும் (52)
பொருளுரை பேசிய (29)
பொற்குட நீர்கொண்டு (8)
மடிமைக்கு வாழ்க்கைப் (87)
மதிநுதல் செந்தா (59)
மறையோ விடுங்குரல் (43)
மாணிக்க வல்லி (32)
மாதுவ வேடம் (92)
மானந்தம் ஆவியன் (34)
முடிமேவு பாண்டியர் (45)
முருகனை வேழ (88)
முன்னாள் நினைப்போற்று (97)
மைந்தரைக் கண்டு (51)
யாங்காண வெம்முளக் (44)
வன்பர்க்கு வம்பர்க்கு (77)
வாழிய சொக்கப் (101)
விடையார் கொடியினள் (48)

விரிகுழல் நன்மணம் (91)
வெறிமேவு பூந்தொடை (13)
வேண்டா வெறுப்பொ (39)
வையையை நின்றிரு (24)

## ஒப்புமைப் பகுதிகள்

1. "பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய" (திருவாசகம், 544 : 1)
(அங்கயற்கண்ணி-22)

2. "இந்துவென் றுலகெலாம் இசைப்ப நின்றதோர்
செந்தழற் கடவுள்" (கந்தபுராணம், அசுரகாண்டம்,
காசிபன் புலம்புறு படலம், 38)
(அங்கயற்கண்ணி-50)

3. "அங்குச பாசம் பிடித்த மகனோ
டாறுமுகனை" (திருவிளையாடற் புராணம்)
(அங்கயற்கண்ணி-61)

4. "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு" (திருக்குறள்,
127) (அங்கயற்கண்ணி-74)

5. "மாத்திரை யெழுத்தியல் அசைவகை யெனாஅ
யாத்த சீரே யடி யாப்பு எனாஅ
மரபே தூக்கே தொடைவகை யெனாஅ" (யாப்பு.)
(அங்கயற்கண்ணி-98).

# துணைநூற் பட்டியல்

1. கச்சியப்ப சிவாச்சாரியார், காசித்திருமடம், திருப்பனந்தாள், தஞ்சாவூர்.

2. கண்ணன், இரா., சிற்றிலக்கிய ஆராய்ச்சி, தொகுதி1,2.. அப்பர் பதிப்பகம், சிவனருள் நிலையம், 3/401, வள்ளலார் தெரு, அண்ணாநகர், ஆவடி ஐ,ஏ,எஃப், சென்னை, 2002.

3. கண்ணன், செ.(ப.ஆ.), பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணம், பாரதி நிலையம், 108, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை, 1995.

4. குமாரசுவாமிப் புலவர்,அ., யாப்பருங்கலக் காரிகை புத்துரை, தேன் புத்தக நிலையம், மனை எண்-57, மூன்றாவது தெரு, சௌமியா நகர்1, மேடவாக்கம், சென்னை, 2004,

5. சாமிநாதையர், உவே., மாலை ஐந்து,
டாக்டர் உவே. சாமிநாதையர் நூல்நிலையம்,
பெசன்ட் நகர்- சென்னை,
1995.

6. பரமசிவம், தகோ.,(பஆ) சுவடிப்பதிப்பு நெறிமுறைகள்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர், 1989.

7. பொன்னுசாமி, மு., தமிழ் சிற்றிலக்கிய வரலாறு
தொகுதி-2,
இந்து பதிப்பகம்,
கோயம்புத்தூர், 2004.

8. மணிகண்டன், ய.(பஆ.) சி.வை. தாமோதரம்பிள்ளை
இயற்றிய கட்டளைக்
கலித்துறை (இலக்கண நூல்)
விழிகள் பதிப்பகம்,
8/எம்.139, 7ஆம் குறுக்குத் தெரு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர் விரிவு,
சென்னை, 2005.

9. மாணிக்கம், அ., திருக்குறள் தெளிவுரை,
தென்றல் நிலையம்,
சிதம்பரம், 2005.

10. மாணிக்கவாசக சுவாமிகள், கங்கை புத்தக நிலையம்,
13, தீனதயாளு தெரு
தியாகராய் நகர், சென்னை,
2002.